# EL FORGE LIMITED

Regd.Off : No.1A, Sriperumbudur High Road (Via) Singaperumal Koil,Appur Village, Kattangulathur Onrium, Chengalpattu District 603204 Phone: (044) 47112500 Fax: (044) 47112523
Corp.Office : No.21C, A.R.K.Colony, Eldams Road, Alwarpet, Chennai 600018 Ph (044)24334010
Email id:edf@elforge.com Web Site : http://www.elforge.com CIN : L34103TN1934PLC000669

Ref: EFL/BSE/531144/BSE/2025-26 14th November 2025

To
The Corporate Relationship Dept.
BSE Limited
Phiroze Jeejeebhoy Towers,
Dalal Street, Mumbai 400 001.

Dear Sir

Sub: Newspaper Advertisement of Extract of Unaudited Financial Results for the quarter and half year ended 30th September, 2025

Ref: Our Scrip Code 531144

Pursuant to Regulation 47 of SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, we enclose herewith the copies of Newspaper cuttings of the Extract of Unaudited Financial Results for the quarter and half year ended 30th September, 2025; as approved by the Board of Directors of the Company in its meeting held on Thursday, 13th November, 2025; published in the following newspaper:-

a) The Financial Express (English)
b) Malai Malar(Tamil)

Kindly take the same on your records.

Thanking you
Yours faithfully
**For EL FORGE LIMITED**

KORUKKAI VISWESWARAN RAMACHANDRAN

Digitally signed by KORUKKAI VISWESWARAN RAMACHANDRAN
Date: 2025.11.14 12:51:50 +05'30'

**K V Ramachandran**

**Vice Chairman & Managing Director**

மாலை மலர்

14—11—2025 (வெள்ளிக்கிழமை)

# மாணவர்களுக்கு நம்பிக்கை அளிக்கும் நான் முதல்வன் திட்டம்

தமிழக அரசு பள்ளி, கல்லூரி மாணவர்களின் நலன் கருதி பல்வேறு சிறப்பு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மாணவ—மாணவியரின் திறனை மேம்படுத்தி அவர்களை அடுத்த கட்டத்துக்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை முதல்—அமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவின்பேரில் அரசு அதிகாரிகள் முழு வீச்சில் மேற்கொண்டு வருகிறார்கள்.

அந்த வகையில் தமிழக முதல்—அமைச்சரின் சீரிய எண்ணத்தில் கடந்த 2022 —ம் ஆண்டில் நான் முதல்வன் என்கிற திட்டம் தொடங்கப்பட்டது. ஆண்டுதோறும் 10 லட்சம் மாணவர்களுக்கு திறன் பயிற்சி அளித்து அவர்களின் திறமையை வெளிக்கொண்டுவந்து ஊக்கப்படுத்துவதே இந்த திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இதன் மூலமாக ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். உள்ளிட்ட தேர்வுகளுக்கு தயாராகும் மாணவர்களை ஊக்கப்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. யு.பி.எஸ்.சி. என்று அழைக்கப்படும் சிவில் சர்வீசஸ் தேர்வுக்கு தயாராகும் மாணவர்களுக்கு 10 மாதங்களுக்கு மாதம் ரூ. 7500 உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. சிவில் சர்வீசஸ் முதன்மை தேர்வுக்கு தயாராகும் மாணவ மாணவிகளுக்கு ரூ.25,000, நேர்காணல் சுற்றுக்கு தயாராகும் நபர்களுக்கு ரூ.50,000 ஊக்கத் தொகையும் அளிக்கப்பட்டு வருகிறது. இப்படி நான் முதல்வன் பயற்சி மையத்தின் மூலமாக சிவில் சர்வீசஸ் தேர்வுகளுக்கு தயாரானவர்களில் இந்த ஆண்டு 87 பேர் வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

அகில இந்திய அளவில் தமிழகத்தைச் சேர்ந்த 155 பேர் தேர்வாகி இருக்கும் நிலையில் அவர்களில் 87 பேர் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் பயற்சி பெற்றவர்கள் என்பது கூடுதல் சிறப்பாக மாறி இருக்கிறது.

சிவில் சர்வீசஸ் தேர்வில் கடந்த ஆண்டு 136 பேர் தேர்வாகி இருந்த நிலையில் இந்த ஆண்டு 14 சதவீதம் அளவுக்கு தேர்ச்சி விகிதம் அதிகரித்திருப்பதாக அதிகாரிகள் கூறி உள்ளனர். ஆண்டுதோறும் ஆயிரம் பேருக்கு இந்த தேர்வு மையம் மூலமாக பயிற்சிகள் அளிக்கப்பட்டு வரும் நிலையில் இளைஞர்களுக்கு தொழில் வளர்ச்சி மற்றும் வேலை வாய்ப்பை ஏற்படுத்தி கொடுப்பது தொடர்பான பல்வேறு பயனுள்ள விரிவான வழிகாட்டுதல்களும் நான் முதல்வன் திட்டம் மூலமாக அளிக்கப்பட்டு வருகிறது.

மாணவர்கள் எந்த துறைகளில் பயிற்சி பெற விரும்புகிறார்களோ அந்த துறைகளைச் சேர்ந்த திறமையான நிபுணர்கள் மூலமாக உரிய பயிற்சிகள் அளிக்கப்படுவதன் மூலம் திறமையான மாணவர்கள் உருவாக்கப்படுவது இந்த திட்டத்தின் கூடுதல் சிறப்பம்சமாகவும் மாறி இருக்கிறது. என்ஜினியரிங், பாலிடெக்னிக், மருந்தகம் மற்றும் மருத்துவ அறிவியல், தகவல் தொழில்நுட்பம், ஆளுமை மேம்பாடு. போட்டித் தேர்வுகள் என மாணவர்கள் எதற்கு தயாராவதற்கு விரும்புகிறார்களோ அதற்கேற்ற வகையில் அவர்களை தயார் படுத்தும் உன்னத நோக்கத்தை கொண்டுள்ள இந்த நான் முதல்வன் திட்டம் தமிழக அரசின் பல்வேறு திட்டங்களில் முதன்மையானதாகவும் முக்கியமானதாகவும் இருந்து வருகிறது.

சிவில் சர்வீசஸ் தேர்வுகளுக்கு தனியார் பயிற்சி மையங்களில் லட்சக்கணக்கில் பணத்தை செலவழிக்க வேண்டிய நிலை உள்ளது. இது போன்ற சூழலில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி—கல்லூரிகளை சேர்ந்த நடுத்தர மாணவ—மாணவிகளுக்கு கடந்த 4 ஆண்டுகளாக புதிய உத்வேகத்தையும், நம்பிக்கையையும் ஏற்படுத்தும் வகையில் சிறந்த வழிகாட்டும் திட்டமாகவே நான் முதல்வன் திட்டம் உருவெடுத்து இருப்பது கல்வியாளர்கள் மத்தியிலும், பெற்றோர்கள் மத்தியிலும் மிகுந்த வரவேற்பை பெற்றிருக்கிறது.

## நாளைய முக்கிய நிகழ்ச்சிகள்

### நாளைய பஞ்சாங்கம்

**விசுவாவசு ஆண்டு ஐப்பசி-29 (சனிக்கிழமை)**

| | |
|---|---|
| பிறை | : தேய்பிறை |
| திதி | : ஏகாதசி நாளை விடியற்காலை 5.39 மணி வரை பிறகு துவாதசி |
| நட்சத்திரம் | : உத்திரம் பின்னிரவு 3.07 மணி வரை பிறகு அஸ்தம் |
| யோகம் | : மரணயோகம் |
| ராகுகாலம் | : காலை 9 மணி முதல் 10.30 மணி வரை |
| எமகண்டம் | : நண்பகல் 1.30 மணி முதல் 3 மணி வரை |
| சூலம் | : கிழக்கு |
| நல்ல நேரம் | : காலை 7 மணி முதல் 8 மணி வரை மாலை 5 மணி முதல் 6 மணி வரை |

### திருவல்லிக்கேணி வரதராஜ மூலவருக்கு திருமஞ்சனம், திருநள்ளாறு ஸ்ரீ சனிபகவானுக்கு அபிஷேகம்

திருநள்ளாறு ஸ்ரீ சனிபகவானுக்கு அபிஷேகம். தூத்துக்குடி ஸ்ரீ பாகம்பிரியாள், வீரவநல்லூர் ஸ்ரீ மரகதாம்பிகை தென்காசி சங்கரநயினார் கோவில், பத்தமடை கோவில்களில் ஸ்ரீ அம்பாள் திருக்கல்யாணம். கடையம் ஸ்ரீ விஸ்வநாதர் திருக்கல்யாணம். திருநெல்வேலி ஸ்ரீ நெல்லையப்பன் விருஷப சேவை, கம்பை ஆற்றில் கதிர் குளித்தல், இரவு ஆயிரங்கால் மண்டபத்தில் திருக்கல்யாணம். மாயவரம் ஸ்ரீ கவுரீமாயூரநதர் கோவிலில் பஞ்சமூர்த்திகள் புறப்பாடு. ரதாரோகணம் திருத்தேர் வடம் பிடித்தல். திருஇந்தளூர் ஸ்ரீ பரிமளரங்கநாதர் காலை வெண்ணைத்தாழி சேவை. இரவு வெள்ளி குதிரை வாகனத்தில் திருவீதி புறப்பாடு. திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள், மன்னார்குடி ஸ்ரீ ராஜகோபால சுவாமி, கீழ்த்திருப்பதி ஸ்ரீ கோவிந்தராஜப் பெருமாள் கோவில்களில் ஸ்ரீ வரதராஜ மூலவருக்கு திருமஞ்சனம். ஸ்ரீ ரங்கம் ஸ்ரீ நம்பெருமாள், திருவள்ளூர் ஸ்ரீ வைத்ய வீரராகவப் பெருமாள் கோவில்களில் திருமஞ்சனம். திருமோகூர் ஸ்ரீ காளமேகப் பெருமாள், ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீ வைகுண்டபதி திருமஞ்சனம். திருவட்டாறு ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள், திருஇந்தளூர் ஸ்ரீ பரிமளரெங்கராஜர் புறப்பாடு. ஆழ்வார் திருநகரி ஸ்ரீ நம்மாழ்வார் புறப்பாடு.

### நாளைய ராசிபலன்


| | | | |
|---|---|---|---|
| மேஷம்— | நன்மை | துலாம்— | வெற்றி |
| ரிஷபம்— | உறுதி | விருச்சிகம்— | இன்பம் |
| மிதுனம்— | திடம் | தனுசு— | நிறைவு |
| கடகம்— | திறமை | மகரம்— | ஜெயம் |
| சிம்மம்— | சிறப்பு | கும்பம்— | நேர்மை |
| கன்னி— | தனம் | மீனம்— | ஈகை |



### ரியல் எஸ்டேட் துறையில் புதிய சகாப்தத்தை படைத்த டிஆர்ஏ ஹோம்ஸ்



டிஆர்ஏ ஹோம்ஸ் (DRA HOMES), ஓட்டுநர்கள் முதல் துறை தலைவர்கள் மற்றும் மூத்த மேலாளர் வரை என 325 உறுப்பினர்களை கொண்ட பணியாளர்களுக்கும் ரூ.125 கோடி மதிப்பிலான பணியாளர் பங்கு உரிமைத் திட்டத்தை அறிவித்துள்ளது. முதல் கட்டமாக, 100—க்கும் மேற்பட்ட பணியாளர்களுக்கு பங்கு உரிமையை வழங்கியுள்ளது. மேலும் முதல் கட்டமாக 100—க்கும் மேற்பட்ட பணியாளர்கள் வியட்னாமுக்கு சுற்றுலா செல்ல இருக்கிறார்கள். அதன் சென்னை தலைமை அலுவலகத்தில் "சமத்துவத்தின் பெருமைச் சுவரை" திறந்து வைத்தது. நிகழ்ச்சியில் டிஆர்ஏ ஹோம்ஸ் நிர்வாக இயக்குனர் ரஞ்சித் ரத்தோட் பேசினார்.

சிறப்பு வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணிகள் நடைபெற்று வருவதையொட்டி வடசென்னை வடக்கு கிழக்கு மாவட்ட அ.தி.மு.க. செயலாளர் ஆர்.எஸ்.ராஜேஷ், ஆர்.கே. நகர் மேற்கு பகுதி பட்டேல் நகர், நேதாஜி நகர், கருணாநிதி நகர், துர்காதேவி நகர் ஆகிய பகுதியில் உள்ள பாகங்களில் உள்ள பூத்களில் வீடு, வீடாக சென்று சிறப்பு வாக்காளர் திருத்தப்பட்டியல் கணக்கெடுப்பு பணிகளில் ஈடுபட்டுள்ள பி.எல்.ஓ.க்கள் முறையாக தங்களது பணிகளை மேற்கொள்கிறார்களா என ஆய்வு செய்தார்.

இணைவேன் என்ற தகவல் உண்மைக்கு புறம்பானது:

# அ.தி.மு.க.வை மீட்டெடுத்து ஆட்சி கட்டிலில் அமர வைப்பது தான் எனது நோக்கம்

## ஓ.பி.எஸ். ஆதரவாளர் வைத்திலிங்கம் எம்.எல்.ஏ. திட்டவட்டம்

தஞ்சாவூர், நவ.14—

அ.தி.மு.க தொண்டர்கள் உரிமை மீட்புக்குழுவில் இருந்து மனோஜ்பாண்டியன் எம்.எல்.ஏ. விலகி கடந்த சில நாட்களுக்கு முன்பு தி.மு.க.வில் இணைந்தார். இதனால் அ.தி.மு.க தொண்டர்கள் உரிமை மீட்புக்குழு இணை ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான வைத்திலிங்கம் எம்.எல்.ஏ.வும் ஓ.பன்னீர்செல்வத்திடம் இருந்து விலகி மீண்டும் அ.தி.மு.க.வில் இணைவார் என்றும் இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு உடன்பாடு எட்டப்பட்டதாகவும் தகவல் பரவியது. ஆனால் வைத்திலிங்கம் எம்.எல்.ஏ. இதனை திட்டவட்டாக மறுத்துள்ளார்.



வைத்திலிங்கம் எம்.எல்.ஏ.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது :— எம்.ஜி.ஆரால் தோற்றுவிக்கபபட்டு ஜெயலலிதாவால் கட்டிகாக்கப்பட்ட அ.தி.மு.க.வை மீட்டெடுத்து ஆட்சி கட்டிலில் அமர வைப்பது தான் எங்களது நோக்கம். மேலும் சில நாட்களுக்கு முன்பு எனக்கு மூளையில் ஏற்பட்ட சிறு அடைப்பு காரணமாக நான் பக்க வாதத்தால் பாதிக்கப்பட்டு சென்னையில் உள்ள தனியார் ஆஸ்பத்தியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், நலம் பெற்று திரும்பியதும் அ.தி.மு.க.வில் இணைவேன் என்றும் வந்த தகவல் உண்மைக்கு புறம்பானது. நான் பூரண நலத்துடன் இருக்கிறேன். பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ளேன் என்பது தவறானது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

சென்னையில்

# முதியவர்களை தாக்கும் மூச்சுகுழாய் நோய் தொற்று

## தீவிர சிகிச்சை பிரிவில் நோயாளிகள் அதிகரிப்பு

சென்னை, நவ.14—

சென்னையில் மூச்சு கோளாறு காரணமாக தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. குறிப் பாக வயதானவர்கள் மூச்சுக்குழாய் நோய் தொற்றால் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள்.

லேசான மூச்சுக்குழாய் அறிகுறிகள், தும்மல், நீர்க் கோழை, வறண்ட இருமல், காய்ச்சல், தலைவலி ஆகியவற்றுடன் மீண்டு வருகிறார்கள். ஆனால் இணை நோய்கள் உள்ள முதியவர்கள் அதி தீவிர அறிகுறிகளுடன் நிமோனியா, மூச்சுத் திணறல் போன்ற பாதிப்புகளை சந்திக்க நேரிடுகிறது. அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் மூச்சுக் குழாய் பாதித்து சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

தேசிய முகமை ஆய்வு நிறுவனத்தில் தீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்ட 5 பேரில் ஒருவருக்கு மூச்சுக் குழாய் நோய் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. கடந்த சில வாரங்களில் காய்ச்சல் மற்றும் மூச்சுக் கோளாறு கொண்ட நோயாளிகள் அதிகரித்து வருவதாக அதன் இயக்குனர் டாக்டர் தீபா தெரிவித்தார்.

ஆகஸ்ட் மாதத்தில் தீவிர சிகிச்சைப் பிரிவில் மூச்சுக் குழாய் நோய், நோயாளிகள் 62 பேர் இருந்த நிலையில் கடந்த 10 நாட்களில் இது தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளிலும் இதே நிலை தொடர்கிறது.

இது குறித்து டாக்டர்கள் கூறியதாவது:—

பெரும்பாலான மூச்சுக் குழாய் தொற்று நோய் பள்ளி பருவக்குழந்தைகளில் இருந்து வீட்டுக்கு பரவுகிறது. 70, 80 வயதுடையவர்களை இந்த நோய் அதிகம் பாதிப்புக்கு உள்ளாக்குகிறது. அவர்களுக்கு தீவிர சிகிச்சை பிரிவில் சேர்த்து சிகிச்சை அளிக்கப்பட வேண்டும். இணை நோய் போன்ற காரணிகளால் வயதானவர்களுக்கு அதிக இடர்பாடு ஏற்பட வாய்ப்பு உள்ளது.

இந்த நோய் மிகவும் தொற்றக் கூடிய வைரஸ். இது லேசான சளி, காய்ச்சல் போன்ற அறிகுறிகளை கொடுத்தாலும் நிமோனியா, பிராங்கைடிஸ் போன்ற தீவிரமான நோய்களை உருவாக்கக் கூடியது. தும்மல், இருமல் மூலம் எளிதாக மற்றவர்களுக்கு பரவக் கூடியது. மூச்சுக் குழாய் நோய் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் 3 முதல் 8 நாட்கள் வரை வைரசை பரப்பலாம். சிலருக்கு 2 வாரங்கள் வரை கூட நீடிக்கலாம். காய்ச்சல், தலைவலி, மூச்சுத் திணறல், உதடு—சருமம் நீலநிறம், உணவு சாப்பிடும் ஆர்வம் குறைதல், கோபமடைதல் போன்ற அறிகுறிகள் காணப்படும். இந்த நோய் பாதிப்பில் இருந்து தவிர்க்க அடிக்கடி கைகளை கழுவ வேண்டும்.

இருமல், தும்மல் வரும் போது முகத்தை மூட வேண்டும். நோயாளிகளுடன் நெருக்கத்தை தவிர்க்க வேண்டும். இதற்கு தடுப்பூசி எதுவும் இல்லை.

சென்னையில் காய்ச்சல் காலம் தொடங்கியுள்ளதால் பெரும்பாலானவர்கள் முதலில் இன்ப்ளூயன்சா என நினைக்கிறார்கள். ஆனால் தற்போது மூச்சுக் குழாய் நோய் பாதிப்பு அதிகம் கண்டறியப்படுகிறது.

இவ்வாறு டாக்டர்கள் கூறினார்.



### அறிவிப்பு

வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம்
தாம்பரம்
ந.க.எண்.3104/2025 அ4
மனு நாள் 19.06.2025

மனுதாரர் ஜெகதீசன் அவர்களின் தாயார் மணி அவர்களின் மனைவி குமுதா என்பவர், எண்.6/68, வடக்கு வெள்ளி தெரு, செயிண்ட் தாமஸ் மவுண்ட், சென்னை - 600016. மனுதாரரின் தாயார் 10.12.2022 அன்று காலாமானார் என்பதனை இறப்பு பதிவேட்டில் பதிவு அப்பொழுது செய்யவில்லை. தற்பொழுது பதிவு செய்ய விண்ணப்பித்துள்ளார்.

இதற்கு எவருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் 30 நாட்களுக்குள் தாம்பரம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் தெரிவிக்கவும்.

ஜெகதீசன்
மனுதாரர்


திண்டிவனத்தில் 18-ந் தேதி

# பா.ம.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டம்

## கூட்டணி குறித்து ராமதாஸ் ஆலோசனை நடத்துகிறார்

திண்டிவனம், நவ.14—

திண்டிவனத்தில் 18—ந் தேதி பா.ம.க. மாவட்ட செயலா ளர்கள் கூட்டம் நடக்கிறது. பா.ம.க.வில் தந்தை, மகன் அதிகார மோதலை தொடர்ந்து ராமதாஸ் தலைமையில் ஒரு அணியும், அன்புமணி தலைமையில் மற்றொரு அணியும் செயல்பட்டு வருகிறது. இந்த இரு அணியினரும் போட்டி கூட்டங்கள் நடத்தி ஆதரவாளர்களை திரட்டி வருகின்றனர். தங்களுக்கு தான் மாம்பழம் சின்னம் ஒதுக்க வேண்டும் என இரு அணியினரும் தனித்தனியாக தேர்தல் கமிஷனுக்கு மனு அளித்துள்ளனர். வருகிற 2026 சட்ட மன்ற தேர்தலை மனதில் வைத்து இருவரும் கட்சி நடவடிக்கைகளில் தீவிரம் காட்டி வருன்றனர். இந்த நிலையில் திண்டிவனம் அடுத்துள்ள தைலாபுரம் தோட்டத்தில் நாளை (சனிக்கிழமை) காலை ராமதாஸ் தலைமையில் வழக்கறிஞர் சமூக நீதி பேரவை மாநில செயற்குழு கூட்டம் நடக்கிறது.

இதனை தொடர்ந்து திண்டிவனத்தில் உள்ள தனியார் மகாலில் வருகிற 18—ந் தேதி பா.ம.க. வனனியர் சங்க மாவட்ட செயலாளர்கள், தலைவர்கள் கூட்டம் நடக்கிறது. மறுநாள் (19—ந் தேதி) இளைஞர் சங்க மாநில, மாவட்ட , நகர, ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது. இந்த கூட்டத்தில் கலந்து கொள்ள அனைத்து நிர்வாகிகளு க்கும் அழைப்பு அனுப்ப ப்பட்டுள்ளது. வழக்கறிஞர் சமூக நீதி பேரவை கூட்டத்தில் 200 பேரும், மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் 400 பேரும் கலந்து கொள்ள உள்ளனர். இந்த கூட்டத்தில் கட்சியின் அடுத்த கட்ட நடவடிக்கைகள், போட்டி கூட்டங்கள் நடத்தி வரும் அன்புமணி அணியினரை எதிர் கொள்வதும்குறித்தும், வருகிற சட்டமன்ற தேர்தலில் யாருடன் கூட்டணி வைப்பது உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து டாக்டர் ராமதாஸ் ஆலோசனை நடத்த உள்ளார். 2026 சட்ட மன்ற தேர்தல் பணிகளை கவனிக்க சீனியர் தலைவர்களுக்கு மாவட்ட வாரியாக பொறுப்புகள் கொடுத்து தேர்தல் பணிகளை துரிதப்படுத்தவும் டாக்டர் ராமதாஸ் முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது.

தென்மேற்கு வங்கக்கடலில்

# புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி நாளை உருவாகிறது

## 17, 18-ந்தேதிகளில் சென்னையில் கன மழைக்கு வாய்ப்பு

சென்னை, நவ. 14—

தமிழகத்தில் வடகிழக்கு பருவ மழை வரும் நாட்களில் தீவிரமடைய வாய்ப்பு இருப்பதாகவும், அடுத்தடுத்து 3 காற்றழுத்த தாழ்வு பகுதிகள் உருவாக வாய்ப்பு உள்ளதாகவும் கணிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தனியார் வானிலை ஆய்வாளரான டெல்டா ஹேமச்சந்தர் கூறியிருப்பதாவது:—

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழையை பொருத்த வரையில் கடந்த மாதம் இயல்புக்கு அதிகமாகவே 23 செ.மீ.அளவுக்கு மழை பதிவாகி உள்ளது.

**15—ந்தேதி**

அதே நேரத்தில் இந்த மாத தொடக்கத்தில் இருந்தே பருவமழையில் தொய்வு நிலவியது. இந்த நிலையில் நாளை (15—ந் தேதி இலங்கையை யொட்டிய தென் மேற்கு வங்க கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு நிலை உருவாக உள்ளது.

இது படிப்படியாக தாழ்வு பகுதியாக வலுப்பெற்று மன்னார்வளைகுடா மற்றும் குமரி கடல் வழியாக லட்சத்தீவை நோக்கி நகரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக வருகிற 16—ந்தேதி டெல்டா மற்றும் தென் மாவட்டங்களில் தொடங்கும் மழை 17, 18 ஆகிய தேதிகளில் தமிழகம் முழுவதும் தீவிரம் அடைய வாய்ப்பு உள்ளது.

**சென்னையில்**

இதன் மூலம் வருகிற 20—ந்தேதி வரையில் அடுத்த சுற்று மழையை எதிர்பார்க்கலாம். இந்த நாட்களில் கடலோர மாவட்டங்களிலும் நல்ல மழைக்கு வாய்ப்பு உள்ளது. சென்னை, திருவள்ளூர், காஞ்சீபுரம், செங்கல்பட்டு, புதுச்சேரி, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, காரைக்கால், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சை, ராமநாதபுரம், தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் 17, 18—ந்தேதிகளில் பரவலாக கன மழையும் ஒரு சில இடங்களில் மிக கன மழையும் பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 12 செ.மீ.க்கும் மேல் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

இதை தொடர்ந்து வருகிற 20—ந்தேதி முதல் 30—ந்தேதிக்குள் 2 காற்றழுத்த தாழ்வு பகுதிகள் வங்கக் கடல் பகுதியில் உருவாக உள்ளது. இதில் முதல் காற்றழுத்த தாழ்வு பகுதி தீவிர காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுப்பெறும்.

வருகிற 21—ந்தேதி உருவாகும் இந்த காற்றழுத்த தாழ்வு பகுதியால் 25—ந் தேதி வரை வடகிழக்கு பருவ மழை தீவிரம் அடையும். பின்னர் இந்த மாத இறுதியில் உருவாகும் காற்றழுத்த தாழ்வு பகுதி படிப்படியாக வலுப்பெற்று புயலாக மாறுவதற்கு சாதகமான சூழல் தென்படுகிறது. இருப்பினும் முதல் 2 காற்றழுத்த தாழ்வு பகுதி களும் தமிழகத்துக்கு நல்ல மழையை கொடுக்கும். 25—ந்தேதிக்கு பிறகு உருவாகும் புயலும் மழையை கொடுக்கும். இந்த புயல் வட தமிழகத்தில் கரையை கடக்குமா? காவிரி டெல்டா பகுதியில் கரையை கடக்குமா? என்பது அதன் நகர்வை பொறுத்து தெரிய வரும். இந்த புயலால் காற்று பாதிப்பு ஏற்படாது. மழை பொழிவே அதிகம் இருக்கும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

ஒரே வீட்டு எண்ணில் 200 படிவங்களால் திணறல்

# பெரும்பாக்கம் காலனியில் 40 ஆயிரம் பேரின் வாக்குகள் பறிபோகும் அபாயம்

## போதிய விவரங்கள் இல்லாததால் விண்ணப்பங்கள் வழங்க முடியாமல் அலுவலர்கள் குழப்பம்

சென்னை, நவ.14—

தமிழகத்தில் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் பணி தொடங்கி உள்ளது. இதற்காக தற்போது உள்ள வாக்காளர் பட்டியலில் உள்ளவர்களுக்கு விண்ணப்ப படிவங்கள் அவர்களது வீட்டுக்கே சென்று வழங்கப்படுகிறது. கடந்த 4—ந்தேதி முதல் வாக்காளர்களுக்கு விண்ணப்ப படிவங்கள் வழங்கப்பட்டு வரும் நிலையில் இன்னும் பலருக்கு இந்த படிவங்கள் வந்து சேரவில்லைஎன்றுகூறப்படுகிறது.

இந்த நிலையில் பெரும்பாக்கம் காலனியில் உள்ள குடிசைமாற்று வாரிய அடுக்குமாடி குடியிருப்புகளில் வசிக்கும் பெரும்பாலானோருக்கு வாக்காளர் விண்ணப்ப படிவங்களை வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டு உள்ளது. இதனால் சுமார் 40 ஆயிரம் பேரின் வாக்குகள் பறிபோகும் அபாயம் ஏற்பட்டு உள்ளது.

சென்னையில் பல்வேறு இடங்களில் இருந்து மறு குடியமர்த்தப்பட்டவர்கள் பெரும்பாக்கம் காலனியில் உள்ள குடிசைமாற்று வாரிய அடுக்குமாடி குடியிருப்புகளில் வசித்து வருகிறார்கள். இங்குள்ள 200 பிளாக்குகளில் சுமார் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பத்தினர் 10 ஆண்டுக்கும் மேலாக உள்ளனர். இவர்களுக்கு வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தத்திற்கு விண்ணப்ப படிவங்கள் வழங்க போதுமான முகவரி விபரங்கள் இல்லாததால் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் திணறி வருகின்றனர். அவர்களால் வாக்காளர்களைக் கண்டுபிடித்து விண்ணப்ப படிவங்களை ஒப்படைக்க முடியவில்லை. முக்கியமாக பல வீடுகளுக்கு ஒரே கதவு எண் உள்ளது. ஆனால் எந்த பிளாக் என்று குறிப்பிடாததால் குழப்பம் உருவாகி உள்ளது.

இது குறித்து பெரும்பாக்கத்தை சேர்ந்த வாக்குச்சாவடி நிலை அலுவலர் ஒருவர் கூறும்போது, ஒரே கதவு எண்ணுக்கு 200 வாக்காளர் விண்ணப்ப படிவங்கள் இருக்கிறது. அந்த வாக்காளர் 200 பிளாக்கில் எதில் வசிக்கிறார் என்று தெரியவில்லை. 8 மாடிகள் வரை சென்று பார்த்தாலும் ஒருவர் அல்லது இரண்டு பேரை மட்டுமே அடையாளம் காண முடிந்து விண்ணப்ப படிவத்தை கொடுக்க முடிகிறது. விண்ணப்ப படிவங்கள் வழங்க 10 பேர் உள்ளோம். கடந்த ஒரு வாரத்தில் நாங்கள் ஒவ்வொருவரும் 200 விண்ணப்ப படிவங்க ளை மட்டுமே கொடுக்க முடிந்தது என்றார்.

இதுகுறித்து அங்குள்ள குடியிருப்போர் சங்க நிர்வாகி ஒருவர் கூறும்போது, "இங்கு வசிக்கும் பெரும்பாலானோருக்கு வாக்காளர் விண்ணப்ப படிவங்கள் கிடைக்க வில்லை. எனவே அரசு முகாம்களை நடத்தி விண்ணப்பங்கள் கிடைக்கவும், அதனை நிரப்பி வழங்கவும் தேவையான உதவிகள் செய்ய வேண்டும்" என்றனர்.



### அறிவிப்பு

வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றம்
தாம்பரம்
ந.க.எண்.3105/2025 அ4
மனு நாள் 19.06.2025

மனுதாரர் S.சங்கர் அவர்களின் தாயார் சாமிநாதன் அவர்களின் மனைவி S.மேரி என்பவர், எண்.140, ஸ்ரீதேவி நாகவல்லி அம்மன் கோயில் தெரு, இந்திரா நகர், செயிண்ட் தாமஸ் மவுண்ட், சென்னை - 600016. மனுதாரரின் தாயார் 17.09.2020 அன்று காலாமானார் என்பதனை இறப்பு பதிவேட்டில் பதிவு அப்பொழுது செய்யவில்லை. தற்பொழுது பதிவு செய்ய விண்ணப்பித்துள்ளார்.

இதற்கு எவருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் 30 நாட்களுக்குள் தாம்பரம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் தெரிவிக்கவும்.

S.சங்கர்
மனுதாரர்




### 'ரிப்பளிக் ஆப் நேச்சர்' குடியிருப்புகள்

ஜிடி பாரதி அர்பன் டெவலப்பர்ஸ் நிறுவனம், ஆடம்பர வாழ்க்கையுடன் அமைதியான இயற்கை சூழலில் வாழ விரும்பும் மக்களுக்காக 'ரிப்பளிக் ஆப் நேச்சர்' என்னும் வில்லா குடியிருப்பு திட்டத்தை அறிவித்தது. சென்னை கிழக்கு கடற்கரை சாலையின் அமைதியான கடற்கரை அருகே அமைந்துள்ள இந்த குடியிருப்பு, கட்டிடக்கலை நேர்த்தியுடன் சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் கட்டப்படுகிறது. மேலும் பிரத்யேக விருந்தோம்பல் அனுபவத்தை வழங்கும் வகையில் இங்கு ஜிடிபி, இந்தியாவின் சிறந்த பிராண்டாக தர வரிசைப்படுத்தப்பட்டு உள்ள செலக்ஷன்ஸ் பிராண்ட் ஓட்டலை இந்தியன் ஹோட்டல்ஸ் கம்பெனியுடன் இணைந்து துவக்க இருக்கிறது என்று ஜிடிபி அர்பன் டெவலப்பர்ஸ் தலைவர் பாரத் தோஷி, நிர்வாக இயக்குனர் அருண் பாரதி தெரிவித்தனர்.






### அவதார் குழுமம் விருது வழங்கும் விழா

அவதார் குழுமம், பணியிட கலாச்சாரம் மற்றும் உள்ளடக்கம் தொடர்பான நிபுணர்களும், முன்னோடி சிந்தனையாளர்களும் கலந்து கொண்ட இந்தியாவின் மதிப்புமிக்க சங்கமமான 'சிறந்தவற்றில் சிறந்த மாநாடு மற்றும் விருதுகள்' நிகழ்ச்சியை சென்னையில் நடத்தியது. இதில் தென் சென்னை நாடாளுமன்ற தொகுதி உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் இந்தியாவில் பணிபுரியும் பெண்களுக்கான சிறந்த 10 நிறுவனங்களுக்கு விருதுகளை வழங்கி சிறப்பித்தார். இந்த நிகழ்ச்சியில் அவதார் குழுமத்தின் நிறுவனர் – தலைவர் டாக்டர் சௌந்தர்யா ராஜேஷ் பேசினார்.




### எல் ஃபோர்ஜ் லிமிடெட்

பதிவு அலுவலகம் : 1A, ஸ்ரீ பெரும்புதூர் நெடுஞ்சாலை (வழி) சிங்கபெருமாள் கோயில், ஆப்பூர் கிராமம், காட்டாங்குளத்தூர் ஒன்றியம், செங்கல்பட்டு மாவட்டம் - 603 204. போன் : (044) 47112500, டெலிபேக்ஸ் : (044) 47112523
இ மெயில் : edf@elforge.com CIN : L34103TN1934PLC000669
நிறுவன அலுவலகம் : கதவு எண் 21C, ஏ.ஆர்.கே. காலனி, எல்டாம்ஸ் ரோடு, ஆழ்வார்பேட்டை, சென்னை - 600 018
போன் : (044) 24334010/11 இ மெயில் : edf@elforge com

**30.09.2025 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத தனித்த நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்**

(ஒரு பங்குக்கான வருமானம் தவிர, ரூ. இலட்சத்தில் தொகை)

| வ.எண் | விபரங்கள் | முடிவடைந்த காலாண்டு 30.09.2025 த. ஆகாதது | முடிவடைந்த காலாண்டு 30.06.2025 த. ஆகாதது | முடிவடைந்த காலாண்டு 30.09.2024 த. ஆகாதது | முடிவடைந்த அரையாண்டு 30.09.2025 த. ஆகாதது | முடிவடைந்த அரையாண்டு 30.09.2024 த. ஆகாதது | முடிவடைந்த ஆண்டு 2025 த. ஆனது |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | செயல்பாடுகள் மூலம் வருமானம் (நிகர) | 1,723.47 | 2,074.90 | 2,078.91 | 3,798.37 | 3,785.57 | 7,671.72 |
| 2. | சாதாரண நடவடிக்கைகள் மூலம் வரிக்குப்பின் நிகர லாபம் / (நஷ்டம்) | 29.78 | 39.28 | 72.96 | 69.06 | 118.89 | 229.78 |
| 3. | இக்காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) வரிக்கு பின் (விதிவிலக்கான இனங்களுக்கு பின்) | 29.78 | 39.28 | 72.96 | 69.06 | 118.89 | 229.78 |
| 4. | செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (ஒரு பங்கின் முகமதிப்பு ரூ.10) | 2,032.43 | 2,032.43 | 2,032.43 | 2,032.43 | 2,032.43 | 2,032.43 |
| 5. | பேலன்ஸ்ஷீட் படிமறுமதிப்பீட்டு ரிசர்வுகள் நீங்கலான ரிசர்வு | 298.53 | 268.74 | 118.57 | 298.53 | 118.57 | 229.46 |
| 6. | பங்கு ஒன்றின் வருவாய் முந்தைய விதிவிலக்கான வகைகள் ரூ (ஆண்டு விகிதம் செய்யவில்லை) அ) அடிப்படை | 0.15 | 0.19 | 0.36 | 0.34 | 0.58 | 1.13 |
| | ஆ) குறைமதிப்பு | 0.15 | 0.19 | 0.36 | 0.34 | 0.58 | 1.13 |

குறிப்பு: 1. செப்டம்பர் 30, 2025 இல் முடிவடைந்த காலாண்டு மற்றும் அரையாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கம், SEBI (பட்டியல் மற்றும் கடமைகள் மற்றும் வெளிப்படுத்தல் தேவைகள்) விதிமுறைகள் 2015 இன் விதிமுறை 33 இன் கீழ் பங்குச் சந்தையில் தாக்கல் செய்யப்பட்டது.

2. கூறப்பட்ட முடிவுகளின் முழு வடிவம் SEBI Limited இன் இணையதளத்தில் (www.bseindia.com) மற்றும் நிறுவனத்தின் இணையதளமான www.elforge.com. இல் கிடைக்கும்.

3. தணிக்கைக் குழுவால் முறையாக மதிப்பாய்வு செய்யப்பட்ட மேற்கண்ட முடிவுகள், நவம்பர் 13, 2025 அன்று நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் இயக்குநர்கள் குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

தேதி : 13.11.2025
இடம் : சென்னை

குழுவிற்காகவும் அதன் சார்பாகவும்
K.V. ராமசந்திரன்
துணை தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர்
DIN: 00322331

## APTUS VALUE HOUSING FINANCE INDIA LTD

**Registered Office : 8B, Doshi Towers, 205, Poonamalle High Road, Kilpauk, Chennai - 600 010 | PH : 044-4565 0003**

**Possession Notice Appendix IV (rule8 (1) of Security Interest (Enforcement) Rules, 2002**

Whereas, the undersigned being the authorized officer of **Aptus Value Housing Finance India Ltd** under the Securitization and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002 and in exercise of powers conferred under Section 13(2) read with Rule 3 of the Security Interest (Enforcement) Rules, 2002 issued demand notice calling upon the borrowers & co borrowers to repay the amount mentioned in the notice and interest thereon within 60 days from the date of receipt of the said notice.The borrowers having failed to repay the amount, notice is hereby given to the borrowers and the public in general that the undersigned has taken **"Symbolic Possession"** of the property described herein below in exercise of the powers conferred on him/her under Section 13(4) of the said Act read with Rule 8 of the said rule. The borrowers in particular and the public in general is hereby cautioned not to deal with the property and any dealings with the property will be subject to the charge of **Aptus Value Housing Finance India Ltd** as mentioned below for each of the respective properties:

| Borrower/s/ Co-borrower/s, Guarantor's Name, Loan Number & Description of the Mortgaged Properties | Demand Notice Dated: 29.08.2025 |
|---|---|
| **Mahalingan, Tamilselvi & Moovendran, Loan No: AMAIYL0176378 -** All That piece and parcel of the Property In Schedule 2 Nagapattinam district, Mayiladuthurai register district, Mayiladuthurai 2 join sub-register, Kuthalam Taluk, 50 Vanathi Rajapuram circle, Vanathi Rajapuram village, Mainroad Mayiladuthurai road S.no: 242-4B, Co-related to Old S.no: 242-4 Measuring 0.05.50 ares equal to 550 sqmts Total extent of 700 sqmts, **Boundaries: North By:** Agorooam Plot, **South By:** Main road, **East By:** Sethuraman plot, **West By:** Jagadeesan plot. | **Outstanding Amount of Possession notice** **Rs.14,63,025/-** (Rupees Fourteen Lakhs Sixty Three Thousand Twenty Five Only) as on **08.11.2025** |

**Date : 11.11.2025**
**Place : VanathiRajapuram**

**Authorised Officer**
**Aptus Value Housing Finance India Ltd.**

## CORRIGENDUM

**MANAPPURAM HOME FINANCE LIMITED**
**FORMERLY MANAPPURAM HOME FINANCE PVT LTD**
**CIN : U65923KL2010PLC039179**
Manappuram Home Finance Ltd at 8/596 A, Padmaprabha Building, Near Sreerama Swami Temple, Cherppu- Thriprayar Road, Thriprayar, Thrissur, Kerala 680567

This Corrigendum is issued to Auction Sale Notice dated 28-05-2025 published in Financial Express. In the said Auction notice pertaining to Borrower **S SOWMIYA,** Please note following to be read correctly as below,

| | | |
|---|---|---|
| Auction Sale Notice | FOR | Reserve Price - Rs. 7,58,500/- (Rupees Seven Lakhs Fifty Eight Thousand Five Hundred Only) date of Auction 28-05-2025 |
| | READ | Reserve Price - Rs.6,00,000/- (Rupees Six Lakhs Only) date of Auction 28-11-2025 |

All other details mentioned in the said Auction sale notice from shall remain unchanged.

**Date : 14/11/2025**
**Place : TAMIL NADU**

**Sd/-Authorized Officer**
**Manappuram Home Finance Ltd**




## EL FORGE LIMITED

**Reg.office: 1A, Sriperumbudur High Road (Via) Singaperumal Koil, Appur Village, Kattangulathur Onrium, Chengalpettu 603204 Phone: (044) 47112500 Telefax (044) 47112523 E Mail : edf@elforge.com**
**CIN: L34103TN1934PLC000669**
**Corporate Office: Door No.21C, A.R.K Colony, Eldams Road, Alwarpet, Chennai – 600018.Phone: (044) 24334010/11 E Mail : edf@elforge.com**

**EXTRACTS OF UNAUDITED STANDALONE FINANCIAL RESULTS FOR THE QUARTER AND HALF YEAR ENDED 30-09-2025**

(Amount in Rs. Lakhs, except Earning per share)

| S. No | Particulars | Quarter ended 30.09.2025 UnAudited | Quarter ended 30.06.2025 Unaudited | Quarter ended 30.09.2024 Unaudited | Half Year ended 30.09.2025 Unaudited | Half Year ended 30.09.2024 Unaudited | Year ended March 31, 2025 Audited |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | Total Income from Operations (net) | 1,723.47 | 2,074.90 | 2,078.91 | 3,798.37 | 3,785.57 | 7,671.72 |
| 2 | Net Profit/(Loss) from ordinary activities after tax | 29.78 | 39.28 | 72.96 | 69.06 | 118.89 | 229.78 |
| 3 | Net Profit/(Loss) for the period after tax (after exceptional Items) | 29.78 | 39.28 | 72.96 | 69.06 | 118.89 | 229.78 |
| 4 | Paid Up Equity Share Capital (Face Value of the share Rs.10/- each) | 2,032.43 | 2,032.43 | 2,032.43 | 2,032.43 | 2,032.43 | 2,032.43 |
| 5 | Reserves excluding Revaluation Reserves as per balance sheet | 298.53 | 268.74 | 118.57 | 298.53 | 118.57 | 229.46 |
| 6 | Earning per share in Rs. Before exceptional items (Not Annualised) | | | | | | |
| | Basic | 0.15 | 0.19 | 0.36 | 0.34 | 0.58 | 1.13 |
| | Diluted | 0.15 | 0.19 | 0.36 | 0.34 | 0.58 | 1.13 |

**Notes:**
1. The above is an extract of the detailed format of unaudited financial results for the quarter and half year ended September 30, 2025 filed with the stock exchange under Regulation 33 of the SEBI (Listing and Obligations and Disclosure Requirements) Regulations 2015
2. The full format of the said results are available on the website of BSE Limited (www.bseindia.com) and on the Company's website www.elforge.com.
3. The above results, duly reviewed by Audit Committee, have been approved by the Board of Directors in this meeting held on November 13, 2025

Date : 13.11.2025
Place : Chennai

For and on behalf of the Board
**K.V.RAMACHANDRAN**
Vice Chairman and Managing Director
DIN: 00322331

## THE TAMILNADU INDUSTRIAL INVESTMENT CORPORATION LIMITED

(A GOVERNMENT OF TAMILNADU UNDERTAKING)

The Growth Catalyst

**T.S.No.10/1, Kumar Nagar, TIIC Building, Avinashi Road, Tirupur – 641 603. Phone: 0421 – 4238567**
**Email: bmtiruppur@tiic.org, CIN : U93090TN1949SGC001458, GSTIN : 33AABCT7737M1ZY**

### SALE NOTICE FOR SALE OF MOVABLE & IMMOVABLE PROPERTIES

E-Auction Sale Notice for Sale of Movable and Immovable Assets under the Securitization and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002 read with provision of Rule 6 (2) and 8 (6) of the Security Interest (Enforcement) Rules, 2002.

Notice is hereby given to the public in general and in particular to the Borrower (s) and Guarantor(s) that the below described movable and immovable properties hypothecated/pledged and mortgaged/charged to the Secured Creditor, the constructive possession of movable and immovable properties which has been taken by the Authorised Officer of Tamilnadu Industrial Investment Corporation Ltd. Secured Officer, will be sold on "As is where is" "As is what is", and "Whatever there is" on 23.12.2025, for recovery of Rs.60,27,626/- (Rupees Sixty Lakhs Twenty Seven Thousand Six Hundred and Twenty Six only) (Interest charged upto 30.11.2025). Further interest will be charged from 01.11.2025 together with cost and charges due to the Tamilnadu Industrial Investment Corporation Ltd. Secured Creditor from M/s. NSR Knitting Tmt.K.B.Suganya, Proprietor of the concern and 1. Tmt.K.B.Suganya (Proprietor) W/o.Thiru.N.Rajesh, 2. Thiru.Nallamuthu (Collateral Owner) S/o.Thiru.Nallasamy, 3. Tmt.Samiyathal (Collateral Owner) W/o.Thiru.Nallamuthu, 4. Thiru.N.Rajesh (Guarantor) H/o. Tmt.K.B.Suganya. The reserve price will be Rs.1,32,18,000/- (Rupees One Crore Thirty Two Lakhs Eighteen Thousand Only) and the earnest money deposit will be Rs.5,00,000/- (Rupees Five Lakhs Only).

| | |
|---|---|
| Name and address of the Borrower | **M/s. NSR Knitting** **Office:** D.No.8/694 K1, Vigneshwara Nagar, Amman Nagar Bus Stop, Neruprichal, Pooluvapatti Post, Tirupur – 641 602 **Factory:** SF.No.167/1A, Vigneshwara Nagar, Neruprichal Village, Pooluvapatti Post, Tirupur – 641 602 |
| Amount due to TIIC Ltd | Due as on 10.11.2025 is Rs.60,27,626/- (Rupees Sixty Lakhs Twenty Seven Thousand Six Hundred and Twenty Six only) (Interest charged upto 31.10.2025). Further interest will be charged from 01.11.2025 together with cost and charges. |
| Name and address of the Guarantors | 1) Tmt.K.B.Suganya, (Proprietor) W/o.Thiru.N.Rajesh, 5/1402, Palanisamy Nagar, 4th Street, Boyampalayam, Pooluvapatii, Tirupur – 641602. 2) Thiru.Nallamuthu, (Collateral Owner), S/o.Thiru.Nallasamy, 5/1402, Palanisamy Nagar, 4th Street, Boyampalyam, Pooluvapatii, Tirupur – 641602. 3) Tmt.Samiyathal, (Collateral Owner) W/o.Thiru.Nallamuthu, 5/1402, Palanisamy Nagar, 4th Street, Boyampalayam, Pooluvapatti, Tirupur – 641602. 4) Thiru.N.Rajesh (Guarantor), H/o. Tmt.K.B.Suganya, 5/1402, Palanisamy Nagar, 4th Street, Boyampalayam, Pooluvapatii, Tirupur – 641602. |

**Description of the Property**

**Primary Security:**
**Plant and Machinery:-**
Imported Circular Knitting Machineries and its allied accessories.
**Imported Machinery:-**
1) Unitex Brand Circular Knitting Machine UBX1820G054FR Dia.18" 20G 54F Model: UBX – 3SK Single Jersey (R) – M/c.No.UT-10385 – 1 No.
2) Unitex Brand Circular Knitting Machine UBX2020G060FR Dia.20" 20G 60F Model: UBX – 3SK Single Jersey (R) – M/c.No.UT-10386, UT-10387 – 2 No's.
3) Unitex Brand Circular Knitting Machine UBX2220G066FR Dia.22" 20G 66F Model: UBX – 3SK Single Jersey (R) – M/c.No.UT-10388, UT-10389 – 2 No's.

**Indigenous Machinery:**
1) ELGI make screw Air Compressor – 1 No.
2) ELGI make Air Receiver – 1 No.
3) ELGI make Air Dryer – 1 No.
4) Vertex Servo Stabilizer 60 Kva 3 Ph Oil Cooled – 1 No.
5) Fabric Roll Checking Machine – 1 No.
6) KANITECH Weighing Scale – 1 No.
7) Genius capacity: 600 gm, min: 200 mg e-d 10 mg Size: Gsm – 1 No.
8) GSM cutter 3 wheel – 1 No.

**Collateral Security:-**
Land measuring 2409 Sqft and Building thereon at S.F.No.296/1, 296/2B Site No.30, Door.No.5/1402, 1402 A, Palanisamy Nagar, 4th Street, Boyampalayam, Thottipalayam Village, Tirupur Taluk & District. Owned by Thiru.Nallamuthu S/o.Nallasamy, Tmt.Samiyathal W/o.Thiru.Nallamuthu. Boundaries: North - Site No.31, East - 30 feet width Northsouth Road, South - Site No-29 and West - North South Itteri.

| Property | Upset Price Rs. | Earnest Money Deposit Rs. | Increment Bid Amount Rs. |
|---|---|---|---|
| **Primary Security Plant & Machinery** | **71,40,000/-** | **5,00,000/-** | **10,000/-** |
| **Collateral Security** | **60,78,000/-** | **5,00,000/-** | **10,000/-** |

| Date of Inspection of Property | Last date for Submission of Bid Form, KYC documents & payment of EMD |
|---|---|
| **Date: 16.12.2025 \| Time: 11.00 AM to 4.00 PM.** | **Date: 22.12.2025 \| Before: 4.00 PM** |

| Property | Date of Auction | Time of Auction |
|---|---|---|
| **Primary Security Plant & Machinery** | **23.12.2025** | **11.00 am to 12.00 noon.** |
| **Collateral Security** | **23.12.2025** | **3.00 pm to 04.00 pm.** |

**Terms and conditions of e-Auction sale**
1. Date of inspection of the Movable and Immovable property is **16.12.2025 between 11 AM to 4.00 PM** and the last date of submission of Earnest Money Deposit (EMD)/ KYC Documents shall be **22.12.2025 by 4.00 PM.**
2. The sale / auction will be conducted on **23.12.2025** as indicated in the advertisement by the undersigned through e-auction platform provided at the Web Portal **https://www.bankeauctions.com**.
3. Extension of time of the e-Auction from the last bid is 5 minutes each and the extension is unlimited times (if bid received in the last 5 minutes).
4. Further interest will be charged as applicable, as per the loan agreement on the amount outstanding and incidental expenses, costs, etc is due and payable till its realization.
5. The bid amount shall be more than upset price. The incremental bid for each items shall be as per the tabular column described above.
6. EMD shall be payable through DD in favour of the TIIC Ltd, payable at Tirupur Branch and shall be submitted to the Authorized Officer at The TIIC LTD, T.S.No.10/1, Kumar Nagar, TIIC Building, Avinashi Road, Tirupur – 641 603. The interested bidders shall submit the EMD along with the bid participation / KYC Documents etc, at the Branch before the date and time specified above.
7. This may also be treated as Notice under Sec 8(6) of Security Interest (Enforcement) Rules 2002 to the borrower/s and guarantor/s of the above said, also the holding of the e-auction sale from the above mentioned date, if their outstanding dues are not paid in full.
8. The bidders are advised to go through the detailed terms and conditions of e-auction available in the Web Portal **https://www.bankeauctions.com** before submitting their bids and taking part in the e-auction.
9. The prospective qualified bidders may avail online training on e-auction from Service provider M/s. C1 India Pvt Ltd prior to the date of e-auction and can contact the service provider **M/s.C1 India Pvt Ltd, Plot No.301, Gulf Petrochemical Building, 1st Floor, Udyag Vihar Phase-2, Gurgaon, Haryana-122 015 India, and having Chennai Number –74182 81709 and E-Mail-ID a tn@c1india.com** Neither the Authorized Officer / TIIC Ltd nor M/s.C1 India Pvt Ltd shall be liable for any internet network problem and the interested bidders to ensure that they are technically well equipped for participating in the e-auction event.
10. The Earnest Money Deposit (EMD) of the successful bidder shall be retained towards part sale consideration and the EMD of the unsuccessful bidders shall be refunded. EMD shall not bear any interest. The successful bidder shall have to deposit 25% of the sale price, adjusting the EMD already paid before 4.00 PM of the next working day after the conclusion of the e-auction. The balance 75% of the sale price shall be paid on or before 15th day of sale confirmation or within such extended period as agreed upon in writing by and solely at the discretion of the secured creditor. In case of default in payment by the successful bidder, the amount already deposited by the offerer shall be liable to be forfeited and the property shall be put to re-auction and the defaulting borrower/ bidder shall have no claim /right in respect of the amount/property.
11. The TIIC Ltd., is not responsible for any liabilities upon the property which is not in the knowledge of the TIIC Ltd.
12. Every bidder of the e-Auction shall submit the attested copies of below mention KYC Documents
a) PAN Card b) Address Proof c) ID Proof

Original documents shall be produced for verification. For further details contact The Authorized Officer, The TIIC Ltd, Tirupur.

Place: **Tirupur**
Date : **14.11.2025**
DIPR / **1341** / Display / 2025

**Authorized Officer**
**The Tamilnadu Industrial Investment Corporation Ltd.,**
**Tirupur**

## EAST COAST RAILWAY

### NOTICE INVITING TENDER

**1) Tender No. 30256988, Dtd. 07.11.2025**

**NAME OF THE WORK: SUPPLY OF WEB DETECTOR (EACH SET CONSISTING OF 02 NOS. TRANSMITTER (21/25KHZ) & 02 NOS. RECEIVER COIL (21/25KHZ) ASSEMBLY BASE CLAMP TYPE SPLIT COILS - SPLIT CABLE LENGTH OF SENSOR 15 METER AS PER SPEC. RDSO/SPN/177/2012 OR LATEST. MAKE - G.G. TRONICS. MAKE/BRAND: GG TRONICS INDIA PRIVATE LIMITED. NOTE: THE SUPPLIED ITEM SHOULD BE COMPATIBLE FOR EXISTING G.G. TRONICS MAKE HASSDAC. [WARRANTY PERIOD: 30 MONTHS AFTER THE DATE OF DELIVERY]**

**Quantity: 14 Set.**
**Inspection by: RDSO**

**2) Tender No. 30256463A, Dtd. 07.11.2025**

**NAME OF THE WORK: SUPPLY, INSTALLATION & COMMISSIONING OF AUTOMATIC AND COMPUTERIZED RAKE TEST RIG AS PER SPECIFICATION ATTACHED ON ANNEXURE. MAKE BRAND: UNIVERSAL, ESCORTS, BRIGHT ENGG. OR SIMILAR. [WARRANTY PERIOD: 30 MONTHS AFTER THE DATE OF DELIVERY]**

**Quantity:15 No.**
**Inspection by: TPI Agency**

**Note :** Material to be supplied within **60 days (for Sl. No. 1), 45 Days (For Sl. No. 2)**

**Date and time of opening of Tender : 08.12.2025 at 1500 Hrs** (for both tender).

Complete details available at : **www.ireps.gov.in**

**Sr. Divisional Material Manager / Waltair**
PR-792/Q/25-26

## CHOLAMANDALAM INVESTMENT AND FINANCE COMPANY LIMITED

Chola — Enter a better life

**Corporate office:** Chola Crest, Super B, C54 & C55, 4, Thiru Vi Ka Industrial Estate, Guindy, Chennai-600 032

### Possession Notice [(Appendix IV) Under Rule 8 (1)]

WHEREAS the undersigned being the Authorised Officer of **M/s. Cholamandalam Investment And Finance Company Limited,** under the Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002 (54 of 2002) and in exercise of powers conferred under Section 13(12) read with Rules 3 of the Security Interest [Enforcement] Rules, 2002 issued Demand Notices dated mentioned below under Section 13(2) of the said Act calling upon you being the borrowers **(names and addressses mentioned below)** to repay the amount mentioned in the said notice and interest thereon within 60 days from the date of receipt of the said notice. The borrowers mentioned herein below having failed to repay the amount, notice is hereby given to the borrowers mentioned herein below and the public in general that the undersigned has taken possession of the property described herein below in exercise of powers conferred on me under sub-section (4) Section 13 of the Act read with Rule 8 of the Security Interest (Enforcement) Rules, 2002. The borrowers mentioned here in above in particular and the public in general are hereby cautioned not to deal with said property and dealings with the property will be subject to the charge of **M/s. Cholamandalam Investment And Finance Company Limited** for an amount as mentioned herein under and interest thereon. The borrower's attention is invited to provisions of sub-section (8) of Section 13 of the Act, in respect of time available, to redeem the secured assets.

| NAME AND ADDRESS OF BORROWER/S & LOAN/AC No. | DT. OF DEMAND NOTICE | O/S. AMT. | DESCRIPTION OF THE IMMOVABLE PROPERTY | DATE OF POSSESSION |
|---|---|---|---|---|
| Loan A/c Nos. HL22SIV000164386 1. Mr/Mrs. KARTHIK G 2. Mr/Mrs. PANCHAVARNAMC Both At : 3/276-1,P KUMARALINGAPURAM, VALLIYUR, NEAR WATER TANK, VIRUDHUNAGAR, TAMIL NADU - 626005 Also At : D.NO.1/623/26/1, PANDIAN NAGAR, MALLANKINARU ROAD NORTH SIDE, , ROSALPATTI VILLAGE, VIRUDHUNAGAR TALUKA, VIRUDHUNAGAR, TAMIL NADU, 626001 3. Mr/Mrs. GRAHAVELG At : 2/35,VALLIYUR MUTHALAMMAN KOVIL, P KUMARALINGAPURAM NEAR WATER TANK VIRUDHUNAGAR TAMIL NADU 626005 | 29-08-2025 | Rs. 2642609/- (Rupees Twenty Six lakhs Forty Two Thousand Six Hundred Nine Only) as on 20-08-2025 | Virudhunagar District, Virudhunagar District Registration, Virudhunagar Taluk, Virudhunagar joint 1 Sub Registration Office District, Rosalpatti Village, Virudhunagar Panchayat Union, patta No.64 Old Survey No.31/1, Door No.1/623/26/1, Assessment No.1502, EB.No.07-230-006-1013, after sub division New S.No- 31/1J & Now Sub Division Patta No.2281, S.No.No.31/1A1A1 in Western side Plot No.1 total 729 Sq.Ft of land and building bounded by : Boundaries : East - Solaiyappan Land, West - Dharmalingam Land, North - Gnanalakshmi Land, South - 15 feet wide East West Rosalpatti panchayat common Pathway. Measurement - East west on the Northern side 18 feet and southern side 18 feet, South North on the western side 40.5 feet and Eastern side 40.5 feet Totally 729 Sq.ft | 08-11-2025 (POSSESSION) |

Place : VIRUDHUNAGAR
Date : 08-11-2025

SD/- AUTHORISED OFFICER,
CHOLAMANDALAM INVESTMENT AND FINANCE COMPANY LIMITED

## The Tamilnadu Industrial Investment Corporation Limited

(Government of Tamilnadu Undertaking)
Villupuram Branch: No.23-A, Ranganathan Road, (Hotel Woodlands Complex), 1st Floor, Chennai – Trichy Trunk Road, Villupuram – 605 602.
Mobile : **9445023488 / 93604 86715** | E-mail: **bmvillupuram@tiic.org** | Visit us at **www.tiic.org**
**CIN : U93090TN1949SGC001458** **GSTIN : 33AABCT7737M1ZY**

### APPENDIX IV [Rule-8(1)]
### POSSESSION NOTICE (For Immovable Property)

**Whereas,**

The undersigned being the Authorised Officer of the **TAMILNADU INDUSTRIAL INVESTMENT CORPORATION LIMITED** under the Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002 [Act 54 of 2002] and in exercise of powers conferred under Section 13(12) read with Rule 3 of the Security Interest (Enforcement) Rules, 2002, issued a Demand Notice dated **18.12.2024** calling upon the borrower **M/s. Parijat Tex International Pvt. Ltd., and Guarantor** (Loan Account No : 66T1567 & 66T1612 TIIC, Villupuram Branch) to repay the amount mentioned in the notice being **Rs.72,18,753/- (Rupees Seventy Two Lakhs Eighteen Thousand Seven Hundred and Fifty Three Only)** together with further interest thereon within 60 days from the date of receipt of the said notice.

The borrower having failed to repay the amount, notice is hereby given to the borrower(s)/ guarantors and the public in general that the undersigned has taken possession of the property described herein below in exercise of powers conferred on him under sub-section (4) of section 13 of Act read with Rule 8 of the Security Interest (Enforcement) Rules, 2002 on this **11th day November 2025.**

The borrower in particular and the public in general is hereby cautioned not to deal with the property and any dealings with the property will be subject to the charge of the **TAMILNADU INDUSTRIAL INVESTMENT CORPORATION LIMITED** for an amount **Rs.72,18,753/-** and interest thereon.

**(The borrower's attention is invited to provisions of sub-section (8) of section 13 of the Act, in respect of time available, to redeem the secured assets.)**

**DESCRIPTION OF THE IMMOVABLE PROPERTY**

**Item - 1**
All that piece and parcel of the land bearing Plot No.1 in S.No:14/4A1A1 measuring **1402 ½ Sq.ft.** Ganga Nagar, Kurungudi Village,Kattumannarkoil Panchayat Union, Within the registration Sub-district Mannarkudi and registration District Chidambaram.

**Bounded on:**
South by 20 Feet Road
North by Govindasamy vakaira land
West by Plot No:2
East by Balasankar Plot

**Item - 2**
All that piece and parcel of the land bearing Plot No.23 in S.No:14/4A1A1 measuring **800 Sq.ft.** Ganga Nagar, Kurungudi Village,Kattumannarkoil Panchayat Union, Within the registration Sub-district Mannarkudi and registration District Chidambaram.

**Bounded on:**
South by Balasankar Plot
North by 20 Feet Road
West by Plot No:24
East by Plot No:22 owned by Tmt. Palaniammal

Date: 14.11.2025
Place: Cuddalore, Tamilnadu
DIPR / 1343 / Display / 2025

**AUTHORISED OFFICER,**
THE TAMILNADU INDUSTRIAL INVESTMENT CORPORATION LIMITED,
VILLUPURAM

## ACCEL LIMITED

CIN : L30007TN1986PLC100219
Regd office : SFI Complex, III Floor, 178, Valluvar Kottam High Road, Nungambakkam, Chennai 600 034.
Phone: 044-28222262, Email: companysecretary@accel-India.com | Website: https://www.accel-india.com
Extract of Unaudited Standalone and Consolidated Financial Results for the Quarter ended 30th September 2025

(Rs. in Lakhs)

| SL. NO. | Particulars | Standalone | | | | | | Consolidated | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Quarter ended | | | Half year ended | | Year ended | Quarter ended | | | Half year ended | | Year ended |
| | | 30.09.2025 | 30.06.2025 | 30.09.2024 | 30.09.2025 | 30.09.2024 | 31.03.2025 | 30.09.2025 | 30.06.2025 | 30.09.2024 | 30.09.2025 | 30.09.2024 | 31.03.2025 |
| | | (Unaudited) | | | (Unaudited) | | (Audited) | (Unaudited) | | | (Unaudited) | | (Audited) |
| 1 | Total Income from operations | 4,326.00 | 3,865.69 | 3,916.37 | 8,191.70 | 7,845.62 | 16,282.39 | 4,364.67 | 3,906.77 | 3,927.69 | 8,271.44 | 7,865.52 | 16,304.53 |
| 2 | Net Profit for the period (before tax,exceptional and/ or extraordinary item) | 44.61 | 161.96 | 84.05 | 206.57 | 217.20 | 497.56 | 41.09 | 158.46 | 59.67 | 199.56 | 158.66 | 363.83 |
| 3 | Net Profit for the period before tax (after share of profit of Associate & before tax,exceptional and/or extraordinary item) | 44.61 | 161.96 | 84.05 | 206.57 | 217.20 | 497.56 | 33.96 | 160.77 | 93.90 | 194.74 | 216.27 | 416.96 |
| 4 | Net Profit for the period before tax (after exceptional and/or extraordinary item and after share of profit of Associate) | 44.61 | 161.96 | 84.05 | 206.57 | 217.20 | 497.56 | 33.96 | 160.77 | 93.90 | 194.74 | 216.27 | 416.96 |
| 5 | Net Profit for the period after tax (after exceptional and/or extraordinary item) | 89.55 | 121.32 | 59.38 | 210.87 | 162.79 | 264.35 | 78.90 | 120.13 | 69.23 | 199.04 | 161.86 | 183.75 |
| 6 | Total Comprehensive Income for the year (Comprising proft / (loss) for the period (after tax) and other comprehensive income (afer tax) | 96.25 | 60.91 | 58.83 | 132.96 | 168.77 | 283.39 | 91.88 | 59.72 | 70.45 | 127.41 | 169.61 | 203.43 |
| 7 | Paid up Equity Share Capital (Face Value Rs.2/- each) | 1,151.45 | 1,151.45 | 1,151.45 | 1,151.45 | 1,151.45 | 1,151.45 | 1,151.45 | 1,151.45 | 1,151.45 | 1,151.45 | 1,151.45 | 1,151.45 |
| 8 | Earnings per Share (Face Value of Rs.2/- per share) (No Annualised) | 0.16 | 0.21 | 0.10 | 0.18 | 0.28 | 0.46 | 0.14 | 0.21 | 0.12 | 0.35 | 0.28 | 0.32 |

Notes:
1. The above Standalone and Consolidated unaudited results as reviewed by the Audit Committee were approved and taken on record by the Board at its meeting held on 12th November, 2025.
2. The other income includes profit on sale of land and building for the half year ended 30th September'2025 amounting to Rs 150.73 lakhs (previous year Rs 167 lakhs).
3. The Company has obtained in principle NOC (No Objection Certificate) from BSE for merger application with respect to merger of M/s. Accel Media Ventures Limited [Amalgamating company] with Accel Limited effective from 1st April 2024. The company has filed a merger application with Hon'ble NCLT on 24th March 2025 and as per the direction of the Hon'ble NCLT dated 27th June'2025 the company had convened the EGM of the member of the company, meeting of secured creditors and unsecured creditors of both the transferor and transferee companies on 9th Aug'2025.
4. The associate company namely Secureinteli Technologies Private Limited has made buy back of share as approved by Board of Director on 31st May'2025 and the transaction was completed on 2nd June'2025. Consequent to the buy back the shareholding of the company in the associate has increased from 26% to 30.97 % effective 2nd June'2025.
5. The figures for the corresponding previous periods have been regrouped/ reclassified wherever necessary to confirm the figures presented in the current period.

Place: Chennai
Date: 12.11.2025

For Accel Limited
Sd/-
VISHNU SIVANANDAN
COMPANY SECRETARY AND COMPLIANCE OFFICER